Meenambikai Kulanthaivel

உ

சிவமயம்

மானிப்பாய்பதிப்

பழங்குடித் தோன்றல்

திருவாளர்

# பொன்னம்பலம் அரியகுட்டி

அவர்களின்

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவாளர்

பொன்னம்பலம் அரியகுட்டி

தோற்றம்: விசு ஆண்டு வைகாசி — 6 ஆம் நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

யாழ்ப்பாணத்து மானியம்பதிப் பழங்குடியிலே தோன்றிய வேளாண்குலதிலகரும், மசுக்கன் நிறுவனங்களின் தாபகரும் தருமசீலருமான

**திருவாளர்கள் சுப்பிரமணியம், நாகராசா**

என்போருடைய அரும்பெறற் றந்தையாரும்,

நவாலியூர்ச் சித்தாந்தசிகாமணி

**முதலியார் மகேசனுடைய**

மாமனும் ஆகிய

## பொன்னம்பலம் அரியகுட்டி அவர்கள்

சிவபதமடைந்ததைக் குறித்து வெளியிட்ட

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திரு. பொன்னம்பலம் அரியகுட்டி அவர்களின்

## வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

ஈழநாட்டின் சிரமெனத் திகழ்வது யாழ்ப்பாணம். அதன் கண்போல்வது **மானிப்பாய்** அது கலைமகளும் திருமகளும் வேற்றுமையின்றிக் கலந்து வாழும் பெருமையுடையது. நாவலரும், பாவலரும், அரசியல் ஞானிகளும் காலத்துக்குக் காலந் தோன்றி மானிநகரை உலகறியச் செய்திருக்கின்றனர். அன்றியும், தாம் முயன்று ஈட்டிய பொருளினால், ஈகை, ஒப்புரவுடைமை என்னும் உயர்ந்த பண்புகளைப் பேணிச் சமுதாயத்தை வளர்த்து வந்த பெரியோர் பலர் இங்கே பிறந்திருக்கின்றார்கள்.

பழைமை மிகுந்த **மருதடி விநாயகர்** திருக்கோயில், சைவ நெறியிலே நம்பிக்கையுடையார்க்குச் சைவ விளக்கத்தையும் சமயாசாரத்தையும் வளர்த்து வருகின்றது.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த மானிநகரிலே மிகப் பழங் காலத்திலே எல்லா வைபவங்களோடுங் குடியேறி வாழ்வாங்கு வாழ்ந்து வந்தவர் **சிங்கநாயக முதலியார்** ஆவர். அவர்க்கு நான்காந் தலைமுறையிலே **பெரிய இராசசூரியர்** தோன்றினர். அவருடைய தம்பியைச் **சின்ன இராசசூரியர்** என்பர். அவருக்குச் **சுவாமிநாதர், சின்னப்பிள்ளை, செல்லாச்சிப்பிள்ளை** என்னும் மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். சுவாமிநாதர் விதானை வேலை பார்த்து வந்தமையால், விதானைசுவாமிநாதர் என்று வழங்கப்பட்டார்.

செல்லாச்சிப்பிள்ளையை **அரியகுட்டி** அவர்களின் பேரனாகிய **கணபதிப்பிள்ளை** மணம் முடித்தார். அவருக்கு மகன் **பொன்னம்பலம்.** அவர் சிவகாமிப்பிள்ளையை மணம் முடித்து இல்லறம் நடாத்தி வந்தார். சிவகாமிப்பிள்ளை **சோமசுந்தரப் புலவரின்** தாயாராகிய இலக்குமிப்பிள்ளைக்குத் தங்கை முறையானவர். சிங்கநாயகமுதலி வழியில் வந்த **மாதவர் வேலாயுதர்,** கணபதிப்பிள்ளைக்குத் தமையன் முறையினர். மாதவர் வேலாயுதர், **முதலியார்மகேசனுக்கு** ஆண்வழிப் பீட்டன். இவ்வாறு அமைந்து வளர்ந்து வருகின்றது அரியகுட்டி அவர்களின் குடும்பத் தொடர்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொன்னம்பலமும் சிவகாமிப்பிள்ளையும்** செய்துகொண்ட தவப்பயனாக, விசு ஆண்டு வைகாசித் திங்கள் 6 ஆம் நாளில் *[20-5-1881]* அவர்கட்கு மூத்த மகனாக **அரியகுட்டி** பிறந்தார். இவருடன் பிறந்தோர், **சின்னையா, சரவணமுத்து, கனகசபை** என்னும் ஆண்கள் மூவரும், திருவாட்டி சின்னம்மா **மருதப்பு** என்னும் பெண் ஒருவரும் ஆவர். இவர்களில் ஆண்கள் மூவரும் வாலிப வயதிலே இறந்துவிட்டார்கள். பஞ்சபாண்டவரில் முதல் மூவர் போலப் பொறுமை, வீரம் முதலிய பண்புகள் உடையோராயிருந்தனர். பெண் சகோதரியார் எல்லாச் சிறப்பும் பொருந்தி உயிர்வாழ்கின்றார்.

பாலனான அரியகுட்டி அவர்கள் பள்ளிப் பருவ மெய்தியதும் பள்ளிக்கு வைக்கப்பட்டார். தமிழிலும் ஆங்கிலத்திலும் கல்வியைப் பெற்றார். திருக்குறள், திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம் முதலிய இலக்கிய நூல்களிலே பாண்டித்தியம் உடையவராய் விளங்கினார்.

சோதிட சாத்திரம், மனையடி சாத்திரம் என்பவற்றைக் கருத்தூன்றிக் கற்று நல்ல புலமை எய்தினார். வாலிபப் பருவமடைந்ததும், தன் சகோதரருடன் சேர்ந்து நாவலப்பிட்டி, கடுகனாவை, மாவனல்லை, கினிகத்தனை முதலிய இடங்களிற் புகையிலை வியாபாரத்தை நடாத்திப் பொருளீட்டி வந்தார். வாணிபமும் உழவுமே அவர் செய்த தொழில்கள்.

மணப்பருவம் எய்தியதும், **வன்னியசேகரமுதலியடி அருமையினார்** கால்வழியில் வந்த **கதிரேசபிள்ளையின்** இளைய மகள் **பார்வதிப்பிள்ளை**யைப் பெற்றோர் மணம் முடித்து வைத்தனர்; பார்வதிப்பிள்ளை **சோமசுந்தரப் புலவர்க்கு** நன் மைத்துனி முறையானவர். இவர்கள் இல்லறப் பூங்காவில் மலர்ந்த நறுமலர்களே, **மசுக்கன் கம்பனித் தாபகரும் நிருவாக அதிபரும் ஆகிய சுப்பிரமணியமும், மேற்படி நிறுவனத் தொழிற்சாலைகளின் அதிபர் திரு. நாகரசாவும் ஆவர்.**

திரு. சுப்பிரமணியம் அவர்கள், அருமையினார் அடியில் வந்த மண்டுவிழான் நல்லதம்பி கந்தையா, திருவாட்டி கனகம்மா கந்தையா என்போரின் புதல்வி **பாக்கியவதி**யைத் திருமணஞ் செய்து சிறப்பாக வாழ்கின்றனர். இவருடைய நிறுவனங்களாற் பல நூறு மக்கள் நல்வாழ்வு வாழ்கின்றனர். பல வேறு அறப்பணிகள் இவர் நல்லுதவிப் பெற்றன. ''பயன்மரம் உள்ளூர்ப் பழுதற்றற் செல்வம் — நயனுடை யான்கட்படின்'', என்ற வள்ளுவர் மறைக்கு இவர் உதாரண புருடராய் விளங்கி வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு **நாகராசா** அவர்கள், மசுக்கன் நிறுவனத்தின் அதிபராகப் பதவி வகிக்கின்றார். இவர் மேற்படி திரு. கந்தையா திருவாட்டி கந்தையா சுகிர்தரத்தினம் என்போரின் புதல்வி **கமலாசனியைத்** திருமணஞ் செய்து சிறப்புடன் வாழ்கின்றனர். தமையனாரைப் போலவே நாகராசா அவர்களும் தரும சிந்தையும் கடவுள் வழிபாடும் உடையவர்.

திருவாளர் **அரியகுட்டி**யவர்கள் தமது புதல்வரைக் கொண்டு அறப்பணிகள் பலவற்றைச் செய்வித்திருக்கின்றார். சிறப்பாக மருதடி விநாயகர் ஆலயத் திருப்பணி வேலைகள் பல இவரால் மேற்கொள்ளப்பட்டன. மருதடி விநாயகப் பெருமானைத் தமது குலதெய்வமாகக் கொண்டவர். அல்லும் பகலும் தவறாது வழிபட்டு வருபவர். ஆலயத்தின் தெற்குப் பக்கத்தில் நிறுவப்பட்ட **மண்டபம்** இவருடைய முயற்சியின் பயனாகும். இவரால் அண்மையில் இறுதித் திருப்பணியாகச் செய்யப்பட்டது, **பாரிய மணியும் மணிக்கூட்டுக் கோபுரமுமாகும்.**

இவ்வாறு அறப்பணிகள் பலவற்றைத் தமது புதல்வர்களால் இயற்றுவித்தவரும், ஊர் மக்களால் நீதிபதி என மதிக்கப்பட்டவரும், தூயவுள்ளத்தினரும், புகழ் நிறைந்த வாழ்க்கை நடாத்தியவருமான திருவாளர் **பொன்னம்பலம் அரியகுட்டி** அவர்கள், உற்றார் உறவினர் கதறியழத் தருமதேவதை இரங்கியேங்க 1967ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 2ஆம் தேதி சனிக்கிழமை வைகறைப் பொழுதிற் சிவனடி சேர்ந்தார்.

நட்சத்திரம் — **மூலம்**
திதி — **துதியை**

***ஆண்டெண்பத் தாறும் அவனிமிசை வாழ்ந்தறமே***
***பூண்டுபுகழ் நாட்டிப் புகனுற்றான் — நீண்ட நதி***
***திங்களொடு கொன்றை திகழ்சடையோன் பேரின்பம்***
***பொங்குமருட் பாதப் புணை.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவுநாளுணர் வழியுநாளுயிர் போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை யென்றலாற்கரு தேன்கிளர்புனற் காவிரி
பாவுதண்புனல் வந்திழிபரஞ் சோதிப்பாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்

* * *

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுட னேயுடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் — பட்டதுபட்
டென்னேர முஞ்சிவனை யேத்துங்கள் போற்றுங்கள்
சொன்னே னதுவே சுகம்.

— பட்டினத்தடிகள்

* * *

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்ற னாருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வன்மை கண்டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் றிருவடி யடைந்தேன்
செழும் பொழிற்றிருப் புன்கூருளானே.

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற்பா — I

## இறப்பு — விருத்தம்

நேர்வரும் பிலவங்க வாண்டு விருச்சிகம்
நிகழ்பூர்வ பக்க மாகும்
ஏர்வருஞ் சனிநாட் டுதியைத் திதியினில்
எழில்மூல மாநன் னுளே
பார்பகர் மானி யம்பதி யுறைவோன்
பகர்சிவ தொண்ட னுகுஞ்
சீர்தரு ம்அரிய குட்டியாஞ் செம்மல்
சிவபதஞ் சேர்ந்த தினமாம்.

## நேரிசையாசிரியப்பா

திருவளர் தாமரைச் செல்வனு மார்பகத்
திருவுறை மாயனுந் தேடியுங் காணு
வாதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதிப் பெருமான் றுலங்கிடு கோணு
சலத்துடன் வண்புகழ் கொண்டு விளங்குபா
லாவி சூழ்ந்தொளிர் தாவில்கே தீச்சர
மாதிய பாடற் றலங்களி னழகொளி
ரீழத் தொன்னக ரியைந்துள வடபான்
முனிவரு மன்னரு முன்னுவ வெலாம்பெறீஇ
யறுமுக நாவல னுரவ ரவதரித்
தொருவரு மோர்கிலா வொண்டமிழ் தன்னையு
மேன்மைகொள் சைவ நெறியும் வளர்த்திடும்
யாழ்நக ராமத னியைந்துள மேல்பாற்
கலைஞர்கள் களிகொளுங் கலைஞர்கள் மல்கவும்
அலைமகள் மலைமக ளருளொளி பல்கவும்
நித்தமுஞ் சொரிந்தருள் நிலைபெற நின்றுமே
யருத்தந் தெரிந்தோர் நிருத்தங் கண்டிட
வாடிடும் மருதடி விநாயகன் கோட்டமு
மறுமுக வேலனி னருளொளிர் கோட்டமு
மலிந்து பொலிந்து விளங்கி யமைந்துநற்
கல்விகேள் விகளின் மல்கியும்; பகர்ந்திடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''திரைகட லோடியுந் திரவியந் தேடெனு''
மௌவை சொன்மொழிக் கான்றதோர் **சான்றென**
வதிந்திடு மறிஞர்கள் வணிக மாந்தர்கள்
செறிந்து நிறைந்து செகத்தவர் யாவருந்
தேனுகர் பொழினிறை வானுய ரழகா
புரியெனத் திருவினிற் பூத்துப் பொலிந்திடு
மானியம் பதிவரு **சிங்க நாயக**
முதலிநன் மரபும் மூதறி வோருறை
தவாஅ நல்லிசை நவாலி யம்பதி
**வன்னிய சேகர முதலி**நன் மரபதுஞ்
சிறந்திட வந்திடு சீர்சால் பொன்னம்
பலஞ்செய் மாதவப் பேற்றிஞ லிப்புவி
வந்துமே யுதித்திடு சுந்தரக் **குரிசில்!**
ஏவரு மவாவுறு நவாலிப் பதியினின்
வன்னிய சேகர முதலியார் மரபினிற்
பெருமை பிறங்கிடு மருமையி ஞர்வழி
வந்திடு கதிரேச பிள்ளையின் புதல்வி
**பார்வதிப் பிள்ளையைச்** சீருறத் தஞஅது
வாழ்க்கைத் துணைநல மாகவே வரித்து
இந்திர னுஞ்சசி யும்மென வியைந்து
ஆண்மையும் பெண்மையு மழகு பொலிந்திட
மாணறங் காத்து மாண்புகழ் பூத்துப்
பெருமைசால் பெருந்திருப் பெற்றினிது **மகிழ்ந்தே**
**க**லியுக வரதன் கந்தவே டஞஅது
பொலிதிரு வருளாற் புவியினி லேவரு
மிராம லக்குவ ராமென வியம்பிடக்-
கொழும்பு மாநகர் குலவிடு மசுக்கன்
கம்பனிச் சொந்தக் காரனுஞ் **சுப்பிர**
**மணியன், நாக ராசா** வெனுமிரு
மைந்தரைச் சிந்தை மகிழ்ந்திடப் பயந்துமே
யாவியு முடலு மாமெனப் பேணியிப்
பூவினிற் புகழுடன் பொருந்திட **வாழ்ந்தவன்!**
''தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செய''லெனும் வள்ளுவன்
வாக்கினிற் கமைவர வளர்த்திடுந் **தந்தை!**
கமலையும் விமலையு மாமெனக் கண்டிடு
நிலைபெறு **பாக்கிய வதி**யொடு, **கமலா**
**சனி**யெனு மருகிய ரிருவரைத் தஞஅதரும்
புதல்வருக் கில்லறப் புனித வதிகளாப்
பொருந்துபு பொருந்திடப் பெற்று **மகிழ்ந்தவன்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கத் தாத்தா வைப்போற் புலமைத்
தங்கத் தாத்தா தாரணி மதிக்க
வித்தகக் கவிதை பத்தா யிரமேல்
தந்தருள் செந்தமிழ்ச் சாகரம் முந்திய
ஈழத்துப் புலவர் பரம்பரை யிலங்க
வாழி வண்டமிழ் வளர்த்த **சோம**
**சுந்தரப் புலவனைத்** துணைவனாய்ப் **பெற்றவன்!**
வைத்திய லிங்கம் வர்த்தச் சங்கத்
ததிபனா யிலங்கி யமைவுறும் பெரியவன்,
சீல முடையவன் சிறந்திடு சங்கீத
கதாப்பிர சங்கங் கனிவுட னாற்றியே
சைவமுந் தமிழுந் தழைத்திட வுழைத்துஞ்
சமுதாய ஐக்கிய சேவைக ளாற்றியும்
''இலனென்று மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணேயுள'' வென்றவாறு
தேடிய பொருளின் பேற்றினைத் தெளிந்து
சிறந்திடு மருங்கைகங் கரியங்க ளீண்டுப்
பலப்பல வியற்றும் **முதலியார் மகேசனை**
மருமக னாக்கொளும் மாண்பினின் **மிக்கவன்!**
பார்வதிப் பிள்ளையின் சகோதரி தங்க
முத்துவின் புத்திரன் மசுக்கன் கம்பனி
யதனி லமைவரு மெழுது வினைஞனா
யமர்ந்திடுஞ் **சோம சுந்தரன்** றன்னைப்
பெருமக னாக்கொளும் **பெருமை யாளன்!**
அளவை யென்னும் வளநக ராங்கண்
விளங்கிய **வீர சிங்கமா** முதலி
வழிவரு மாதவர் வேலா யுதரின்
அடிவரு தோன்றல் அரசியல் ஞானி
படிபுகழ் கலைஞன் பண்புசால் உத்தமன்
**பேரின்ப நாயகப்** பெயருடைச் செம்மலைச்
சீரிய வுறவின ராகப் **பெற்றவன்;**
சத்திய மூர்த்தி, வாமினி, சாற்றிடு
மிராச தேவி, டாக்டர் இரத்தின
வேலொடு மகேந்திரன், விளங்கிடு சுபத்திரா
தேவி, கணேசன், மல்லிகா தேவி,
சரோசா தேவி, சகுந்தலா தேவி
நகுலே சுவரன், விசய நாதன்,
உமாவதி, லோக நாத, னுஷாவதி,
சுகன்யா தேவி, யுருத்திர குமாரன்,
நிலாமதி யுடனே கந்த ராசா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேச ராசா, ரவீந்திர னிவர்தமைப்
பேரராக் கொடுபே ருவகை **தொண்டவன் !**
ரவிசந் திரனொடு ரதினி, ஜனனி,
சசித ரன்.சிவ மோக னிவர்தமைப்
பீட்டப் பிள்ளைக ளாகக் கண்டிடும்
மேட்டிமை பூண்டு விளங்கிடு **மேலோன் !**
செந்தமிழ்க் கலைகள் ; சிறந்துள புராண
படனம், பகர்ந்திடு சோதிடக் கலையினில்
நிரம்பிய புலமை நிறைந்திடுங் **கலைஞன் !**
பண்டை நாள்வரு பஞ்சாயத் தலைமையர்
போலவே யூரினி னிலவிடும் பற்பல
பிணக்குக டீர்த்துநல் லிணக்கப் படுத்திடும்
பட்டம் பெறுச்சமா தான **நீதிபதி !**
ஆல மரமது அகன்று கிளைத்து
ஞாலத் தவர்க்கு நிழலளிப் பதுபோற்
சுற்றத்தாற் சுற்றப் படவொழுகி யச்சுற்றந்
தன்னையே சூழ்ந்து தமரர்ப் பேணிச்
செழுங்கிளை தாங்கிய செம்மனச் **செல்வன் !**
கருதிடு மடியவர் கடுவினை களைந்திடு
மருதடி விநாயகன் றன்னை மறந்திடா
தென்று மேத்திநல் லின்பங் **கண்டவன் !**
இருபதி னுயிரம் ரூபாய் பெறுமதி
யுள்ளதோ ரசையா மணிதனை யவன்றனக்
கன்புட னளித்து மளவில் திருப்பணி
பற்பல வியன்ற பாங்குடைத் **தொண்டன் !**
''ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றுது நிற்ப தொன்றிலை'' யெனுமவர்
திருவாய் மொழியது சிறந்திட வாழ்ந்து
நன்மையே தெரிந்து நன்மையே புரிந்து
நன்மையே கண்டிடும் **நற்பண் பாளன் !**
வஞ்சகம் பொறாமை மனத்தெழு வெகுளி
கொஞ்சமு மில்லாக் குணப்பெருங் குன்றெனு
**மரிய குட்டியா மண்ணு னிவனே !**
இவன்றன் ;
இத்தர வாழ்விது மித்தை யாமிது
வருவதும் போவது மாவதே யாகும்
எத்தனை முனிவ ரெத்தனை மன்னவர்
எத்தனை மக்க ளெத்தனை பேர்க
ளிப்புவித் தோன்றி யப்படிப் போயினர்,
காசினி வாழ்விது கனவது போலுமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்றுளந் தெளிந்து எய்திய வயதிங்
கெண்பது மாறு மியைந்திடு மெல்லையில்
அன்புள மக்க ளலறித் துடித்திட
வின்புள வுறவின ரிரங்கி யேங்கிட
வுற்றவர் மற்றவ ருள்ள முருகிட
மருவிடு மருதடி விநாயகன் றிருவடி
கருதியே யுளமதி லிருகரங் கூப்பிறின்
றியம்பிடு பிலவங்க வற்சர மியைந்திடு
விருச்சிகம் பூர்வ பக்கத் துதியை
மூலநா ளதனிலே தூல வுடம்பினைத்
துச்சமென் றுதறித் தற்பர னடியவர்
தந்திடு விமானந் தன்னிலே யிவர்ந்து
பவமறுத் தருளும் பாங்கின்
சிவன்திருக் கழலிணை சேர்ந்தன னினிதே.

**புத்திரர் சுப்பிரமணியம், நாகராசா பிரலாபம்**

## எண்சீர் விருத்தம்

அன்புடனே நோன்புபல நாளு மாற்றி
அவனியிலே யெமைப்பயந்து ஆசை யூட்டிப்
பண்புடனே கண்ணையிமை காப்ப தொப்பப்
பார்புகழ வளர்த்தெடுத்துப் பண்பின் மேவுங்
கண்போன்ற கலைபலவுங் கவினத் தந்து
கடமையெலாம் புரிந்துவந்தாய் கருத்தி னோடு
துன்பேறித் துயருழந்து தவிக்க வின்று
தூயவனே விட்டெமைநீ துறந்திட் டாயே.

தந்தைமகற் காற்றுதவி யாவுஞ் செய்தாய்
தாரணியில் எம்மையா! நீதா னுந்தன்
சிந்தைமகிழ் கூரமரு தடியா னுக்கோர்
திருமணியு மிருபதினா யிரம் வரையிற்
றந்ததனைச் செவ்வனே யொலிக்கச் செய்து
தனிமகிழ்ச்சி பூத்துவகை பொங்கு முன்ன
ரந்தகனும் வந்திட்டா னுனைக்கொண் டோட
ஆ! ஆ! நா மலறுகின்றோ மென்செய் கோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியங்கள் திரண்டவொரு வடிவே யெம்மைப்
பொலிவுடனே போற்றிவந்த வையா! வந்தோ
மண்ணுலகி லுந்தனுயிர்க் கந்தகன்செய்
மாயமதை யாங்காண முடிய வில்லை
கண்ணுறக்க மின்றியுளங் கலங்கி னேமுன்
காசினிவாழ் வொழிந்ததெனக் கருதுங் காலை
மன்னவனே யெம்மனந்தா னுறு மாறு
மகிழ்ந்தொருநல் வார்த்தைதான் மலர்ந்தி டாயோ?

## மருகியர் பாக்கியவதி, கமலாசனி வருத்தம்

### வெண்பா

ஆதரவு மன்பு மருளும் நிறைந்துபுவி
மீதிலெமைப் புரந்து மேன்மைபெறக்—காதலுடன்
மக்களைப்போல் வைத்திருந்த மாமாவே! நீர்பிரிந்தீர்
எக்காலங் காண்போ மினி.

ஆசை யொடுபேணி யருமையுட னேயிருந்த
பாசமுள்ள மாமா பறந்ததென்ன—நேசமுடன்
எங்கள் குலத்துக்கோ ரின்மதியாய் நீரிருந்தீர்
எங்கோநாங் காண்ப தினி.

## பேரர் சத்தியமூர்த்தி, நகுலேசுவரன் கலங்குதல்

### கலித்துறை

அப்பா வெனவுனை நாங்க ளனுதின மாசையுடன்
தப்பாது கூறி யருகி லணைந்திட வாதரவாய்
எப்போது மின்ப மொழிகள் சொரிந்தெமை ஏற்றிடுவாய்
இப்போ தொருமொழி செப்பாது நீயுமெங் கேகினையே.

### வெண்பா

என்னருமைப் புத்திரரி னின்பமக்காள் வாருமென்று
உன்மடியில் வைத்தே யுளமகிழ்ந்து—இன்மொழிகள்
முப்போது மேபயிற்றி வைத்தவப்பா வுன்முகத்தை
யெப்போது காண்போ மினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கமுடி யாத்துயரந் தானடைந்தோம் தாரணியி
லேங்கிமிக நின்றே மிரங்கினேம்—பாங்கின்
பெருங்கூற்று வன்வந்து பேருடல்சே ராவி
யொருங்கேற்றுக் கொண்டோடும் போது.

**மருமகன் முதலியார் வை. மகேசன் யே. பி. பிரலாபம்**

## வெண்பா

அன்பும் மதிப்பும் அருளார் பெருங்குணமும்
இன்பும் பெறநாளு மேத்திவந்த—என்னரிய
மாமாவே யுங்களது மாமுகத்தை மாநிலத்தில்
நாமாரோ காண்பேம் நவில்.

பாரி லருமையுடன் பன்மதிப்பு மேதெரிந்து
சீருஞ் சிறப்புற வேபுரிந்து—ஏர்பெறவே
வைத்து வழிபலவுங் காட்டிவைத்த மாமாவே
எத்தினமோ காண்ப தினி.

**பொது - புலம்பல்**

## கலித்துறை

தந்தையுந் தாயுந் தமர்களுந் தானெனத் தானினைந்து
சிந்தை மகிழ்ந்துநற் சீர்பல பெற்றுச் சிறப்புறவே
எந்த வகைக்கு மிணங்கி யிருந்த வெமைமறந்தே
யந்தமி லீசன் பதமடைந் தாயீ ததிசயமே.

**ஆக்கியோன் கூற்று**

## எண்சீர் விருத்தம்

மண்டிணிந்த மாநிலத்தில் வாழ்வோர் தம்முள்
மாண்டொழிந்து போகாதார் யாரு மில்லை
உண்டிருந்து வாழ்வதற்கே யுலைந்து வாடி
உழன்றிடுவீர் நாடோறும் இறப்பை யாண்டுங்
கண்டிருந்து மேனோதான் கலங்க வேண்டுங்
காலவெள்ளம் வருமுன்ன ரணையைக் கட்டித்
தொண்டியன்ற வகைபுரிந்து துன்பம் போக்கித்
தூயபரம் பொருளினருட் பாதந் தேடீர் !

— பண்டிதர் த. சுப்பிரமணியம் அவர்கள் பாடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற்பா — II

## இறந்த நாள்

1. ஆண்டு பிலவங்கம் ஆங்கார்த் திகைத்திங்கள்
பூண்டபதி ஞறு புகல்துதியை — காண்டகுசீர்
தக்கரிய குட்டித் தரும நெறியாளன்
நக்கனடி புக்கதிரு நாள்.

## இறந்தோன் இயல்பு

2. மருதடியான் பாதம் மனத்திருத்தி யென்றும்
கருதடியேன் என்னையினிக் காக்க — வருமிடர்கள்
இல்லையெனக் கைகூப்பி யேகினன் வானோர்கள்
நல்விருந்தா யேற்க நயந்து.

3. மாசற்ற சிந்தை; மலர்ந்த முகப்பொலிவு;
தேசுற்ற மேனித் திருவாளன் — ஆசற்ற
தேவார் சிவலோகஞ் சென்றடைந்தான் தேவர்தரு
பூவார் விமானம் புகுந்து.

4. இந்திரச் செல்வன் இயற்கைப் பிரமணியன்
வந்த துணை நாக ராசனெனும் — மைந்தர்
கமலவிழி சிந்திக் கலங்கி யழுதார்
அமலனடி யுற்றடைந்த போது.

5. ஆர்க்கு மினியன் அரியகுட்டி யென்றேதும்
பேர்க்குப் பெரியன் பிறர்நலமே — பார்க்கும்
திருவுடைய மைந்தர் திருத்தாதை சேர்ந்தான்
கருவடையான் இன்பக் கழல்.

6. நீறகலா நெற்றியான்; நெஞ்சகலா மந்திரத்தான்;
வீறகலாத் தோற்ற விறல்வீரன் — ஆறகலான்
ஐந்துகரன் நால்வாயன் முக்கண்ணன் ஈரடிகள்
சிந்தையொன்று செல்வமுடை யான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மக்கள் இருவர்; மகிழ்பேரர் பத்தெண்மர்;
தொக்கமுதற் பீட்டர் தொகையைவர் — தக்கோனே
நல்லரிய சூட்டி நளிகடல்சூழ் வையத்திற்
சொல்லரிய செல்வனெனச் சொல்.

## இறந்த நாளிலும் மறுநாளிலும் மழை பெய்தமை

8 தேவர் வரவேற்பிற் சிந்திவிட்ட பன்னீரோ
காவமரும் இந்திரனார் கண்ணீரோ — பூவுலகில்
மான வுடல்விட்ட நாளும் மறுநாளும்
வானம் பொழிந்த மழை.

## மைந்தர் இருவரும் மனங்கவன்றது

9. ஐயனே எம்மைப் பெற்ற அருமணிச் சுடரே அகத்து
மெய்யனே கருணை மேவும் மேகனே வறுமை நாளிற்
பொய்யிலா தெமக்குக் கல்வி புகட்டிய புனித மூர்த்தீ
செய்வது தெரியா தேங்கித் தீயிடம் மெழுகொத் தோமே;

10. பொன்னினை யுருக்கி வார்த்த பொற்பமை மேனி காணும்
சொன்னய மொழிகள் கேளோம் துயர்க்கட லமிழ்ந்தி
நின்றோம்
நின்னயப் புதல்வ ரென்று நீடுல கேத்த வைத்தாய்
பன்னுகைம் மாறு முண்டோ கற்பகப் பான்மை யோய்க்கே.

11. வறுமையே கூர்ந்த நாளில் வளமிகு புதல்வ ரைப்போல்
அருமைசே ருண்டி யாடை குறைவிலா தளித்த வையா
கருணையே வடிவ மாகு மன்னையாள் கடந்த காலைத்
தருணமா ரெம்மைப் பேணித் தாங்கிய தவமே போற்றி.

12. மெய்யினுற் குறும்பு செய்த வேளையெம் மேனி நோக்கிக்
கையினுற் றழும்பு வையாக் கமலமார் கைக ளந்தோ
செய்யதீப் பிழம்பிற் பட்டுச் செகுவதைக் கண்ட கண்கள்
ஐயனே புண்கள் தேம்பித் தேம்பியே யழுது நிற்கும்.

13. அன்புடன் பண்பு வாய்மை அருங்கல மனைய கற்பின்
இன்புட னெம்மைத் தாங்கு மிருவரை யெமக்குத் தந்தாய்
துன்புடன் கண்ணீர் சிந்தித் துயர்க்கட லாழங் கண்டார்
என்புடன் இதய நெக்கி னேமுனைக் காண்ப தெந்நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாக்கியவதியும் கமலாசனியும் நீக்கலிலாத நெடுந்துயருற்றது

14 நேசமிகு மாமாவோ நேற்றிருந்தாய் இன்றில்லை
ஆசைமிகு பொன்வார்த்தை ஆரெமக்குச் செப்பிடுவார்
காசுபணம் பெரிதல்ல காதன்மிகு மணியிரண்டைப்
பாசமிகத் தந்தோனே பரிதபித்து வேகின்றோம்.

15. வேகாமல் வேகின்றோம் வேறுக நோக்காமல்
மாகாதல் செய்தெம்மை வாழ்வித்த பெரியோனே
போகாத துயரத்தைப் போக்கவழி காணேமே
தேகாதி விட்டாலும் தெய்வமே யுனைமறவேம்.

16. பாக்கிய வதியென்றும் பகர்கமலா சனியென்றும்
நோக்கியெமை யழையாது நோற்றிருந்த மலர்வாயால்
தேக்கெறியுந் தேன்மொழியாற் செல்வங்காள் வம்மென்று
நாக்குளிரச் சொன்னமொழி நானிலத்துக் கீடாமோ.

## பேரப்பிள்ளைகள் சேரக்கவன்றது

17. தித்திக்கும் மாம்பழமும் தேனெழுகு தோடைகளும்
புத்திக் கினிமைதரும் பொன்மொழிக ளுடன்கலந்து
பத்திச் சுவையுடனே தந்தெம்மைப் பாலித்தோய்
எத்திக்குங் காணுமல் ஏங்கிமிகத் தவிக்கின்றோம்.

18. அன்பொழுகும் பாட்டாவோ ஆசைமணிக் கையாலே
துன்பொழுகா தெம்மைநிதம் தூக்கி வளர்த்தோனே
வன்பொழுக வையாத மணிவாயா நினைப்பிரிந்தே
என்பொழுகக் கரைகின்றோம் இனிக்காண்ப தெந்நாளோ.

## ஊரார் உரைத்தது

19. உண்மைக் கொருவன் உயர்சோ திடம்வல்லான்
வண்மை யிருவர்க்கு வான்றந்தை — எண்ணமைந்த
விண்ணோர்க்கு நல்ல விருந்தாகு னென்றதே
பண்ணோங்கு மானிப் பதி.

20. மானி மருதில் வளர்கோட்டத் தேவுக்கு
ஆன மணிக்கோ புரமமைத்தான் — வானவருங்
கேட்கமுனம் மற்றவர்க்குக் கேண்மை யுறவாளுன்
வேட்கையெலாம் ஐங்கரன்மேல் வைத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவாளர்
பொன்னம்பலம் அரியகுட்டி

தோற்றம் : 20-5-1881. மறைவு : 3-12-1967.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. உற்று றுறவினரை ஊரரரை வாழ்விக்க
முற்றுதொழிற் சாலை முடித்தானைப் — பெற்றவனின்
புண்ணியமே புண்ணியமா மென்று புகன்றதே
நண்ணுபுகழ் மானி நகர்.

## நகுலேசுவரனும் சத்தியமூர்த்தியும் கூறியது

22. ஆரமணித் தோளில் அரவிந்தக் கைத்தலத்தில்
வாரமுட னேந்தி வளர்த்தோனைச் — சீரிய
அப்பாவை ஆசைமிகும் தாத்தாவை ஐயையோ
எப்பிறப்பிற் காண்போ மினி.

## மைந்தர் மருதடியானை வேண்டுதல்

23. வந்திப் பவர்க்கருள் செய்தருள் சிந்தா மணிவிளக்கே
புந்திப் பெருங்கா டளந்தறி விகின்ற போதகமே
சிந்தைக் கினியன செய்தெங்கள் வாழ்வு சிறக்கவைத்த
தந்தைக் கருளுதி சேவடிக் கீழோர் தலைமறைவே.

24 சருது மடியார்க் கறம்பொரு ளின்பமுங் கல்விகளும்
விருதுந் தருகின்ற தெய்வமே நின்னையாம் வேண்டுகின்றோம்
பெரிது முனதடி யானுக் கருளுதி பேசரிய
மருதடி யானே மலரடிக் கீழோர் தலைமறைவே.

## தேற்றம்

25. இன்றிருந்தார் நாளை யிலரென்னும் வாய்மைமொழி
அன்றிருந்து பெற்ற அறிவன்றோ — நன்றிருந்து
செல்லாத செல்வனடி சேரத் துறைகாண்பீர்
நில்லாது யாக்கை நிலைத்து.

திருச்சிற்றம்பலம்.

— அன்பர் ஒருவர் பாடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருநீற்றுப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவால வாயான் றிருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் றிருநீறே.

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தகைவது நீறு திருவால வாயான் றிருநீறே.

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் றிருநீறே.

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே.

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவா யான்றிரு நீறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவமறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யாலவா யான்றிரு நீறே.

மாலோ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் றிருநீறே.

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் றிருநீறே.

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

— திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

---

## பஞ்சாக்கரத்திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினு
நெஞ்சக நைந்து நினைமி னுடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்செ ழுத்துமே.

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே.

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிட
ரான கெடுப்பன வஞ்செ ழுத்துமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர் தீய ரெனது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்
தல்லல் கெடுப்பன வஞ்செ ழுத்துமே.

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச வைம்பொழில்
தங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
அங்கை யிலைவிர லஞ்செ ழுத்துமே.

தும்ம லிரும லொருடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினு
மம்மை யினுந்துணை யஞ்செ ழுத்துமே.

வீடு பிறப்பை யறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாடொறு
மாடு கொடுப்பன மன்னு மாநட
மாடி யுகப்பன வஞ்செ ழுத்துமே.

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டை யிராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்ட மளிப்பன வஞ்செ ழுத்துமே.

கார்வண ஞன்முகன் காணு தற்கொணுச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன வஞ்செ ழுத்துமே.

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்க டெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன வஞ்செ ழுத்துமே.

நற்றமிழ் ஞானசம் பந்த ஞன்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
வற்றமின் மாலையீ ரைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்ப ராவரே.

— திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௨

# அடைக்கலப்பத்து

## (பக்குவ நிண்ணயம்)

### திருப்பெருந்துறையில் அருளியது

*[இது மணிவாசகப் பெருமான், திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்குங் காலத்து, ஏனைய அடியவரெல்லாரும் இறைவன் திருவடிக்கமலத்தை அடைந்து பேரின்பமுறத் தாம்மட்டும் தனித்தமையைக் கண்டு வருந்தி அடைக்கலம் புகுவதாக அருளிச் செய்தது.]*

திருச்சிற்றம்பலம்

செழுக்க மலத்திர ளனநின் சேவடி சேர்ந்தமைந்த
பழுத்த மனத்தடி யருடன் போயினர் யான்பாவியேன்
புழுக்க ணுடைப்புன் குரம்பைப்பொல் லாக்கல்வி ஞானமிலா
அழுக்கு மனத்தடி யேன்உடை யாயுன் அடைக்கலமே.

வெறுப்பன வேசெய்யு மென்சிறு மையைநின் பெருமையினாற்
பொறுப்பவ னேயராப் பூண்மவ னேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் றிருவரு ளாலென் பிறவியைவேர்
அறுப்பவ னேயுடை யாய்அடி யேனுன் அடைக்கலமே.

பெரும்பெரு மானென் பிறவியை வேரறுத்துப் பெரும்பிச்சுத்
தரும்பெரு மான்சது ரப்பெரு மானென் மனத்தினுள்ளே
வரும்பெரு மான்மல ரோனெடு மாலறி யாமனின்ற
அரும்பெரு மானுடை யாய்அடி யேனுன் அடைக்கலமே.

பொழிகின்ற துன்பப் புயல்வெள் ளத்திநின் கழற்புணை கொண்டு
இழிகின்ற அன்பர்க ளேறினர் வான்யா னிடர் கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக் காமச் சுறவெறிய
அழிகின்ற னன்உடை யாய்அடி யேனுன் அடைக்கலமே.

சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் திறமறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மானன்ன நோக்கிதன் பங்கவிண் ணோர்பெருமான்
அருள்புரி யாயுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போற் றளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள் வணங்குவன் வல்வினையேன்
ஆழியப் பாவுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

மின்கணி ஞர்நுடங்கு மிடையார் வெகுளிவலையி லகப்பட்டுப்
புன்கண ஞய்ப்புரள் வேனைப் புரளாமற் புகுந்தருளி
என்கணி லேயமு தூறித்தித் தித்தென் பிழைக்கிரங்கும்
அங்கண னேயுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின் மலரடிக்கே
கூவிடு வாய்கும்பிக் கேயிடு வாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடு குழல்போற் கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடு வேனுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

பிறிவறி யாவன்பர் நின்னருட் பெய்கழற் றாளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்துபெற் றாருன்னை வந்திப்பதோர்
நெறியறி யேனின்னை யேயறி யேனின்னை யேயறியும்
அறிவறி யேனுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

வழங்குகின் றாய்க்குன் னருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை யேனென்விதி யின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்ளாய்
அழுங்குகின் றேனுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்சேர்க்கை

உ
சிவமயம்

# திருவருட்பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டு மயன்மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானு மதுவே வேண்டி னல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிர வென்கண்கள் குளிர்ந்தனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மீண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்
காட்செய்ம்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்தபொரு ளளவில்லதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்று மென்றுமுள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## கந்தரலங்காரம்

அடலரு ணைத்திருக் கோபுரத் தேயந்த வாயிலுக்கு
வடவருகிற் சென்று கண்டுகொண்டேன் வருவார்தலையிற்
தடபடெனப்பல குட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக்கிளைய களிற்றினையே.

அழித்துப் பிறக்கவொட்டா வயில் வேலன் கவியையன்பா
லெழுத்துப் பிழையறக் கற்கின்றி லீரெரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே.

பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதைகொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பினால் மெல்ல மெல்லவுள்ள
வரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித் தறிந்த வன்றே
கரும்புந் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே.

ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மே
லளியில் விளைந்ததொ ரானந்தத் தேனை யநாதியிலே
வெளியில் விளைந்த வெறும் பாழைப்பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுக மாறுடைத் தேசிகனே.

தேனென்று பாகென் றுவமிக் கொணுமொழித் தெய்வவள்ளி
கோனன் றெனக்குப தேசித்த தொன்றுண்டு கூறவற்றோ
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி யன்று சரீரியன்றே.

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்று
மிடுங்கோ ளிருந்தபடி யிருங்கோளெழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றத் துளைக்க வைவேல்
விடுங்கோனருள் வந்து தானேயுமக்கு வெளிப்படுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலிகா ளுங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவலி யுண்ணவொட்டா வுங்களத்தமெல்லா
ஆழப் புதைத்து வைத்தால் வருமோ நும்மடிப்பிறகே.

சுழித்தோடு மாற்றிற் பெருக்கானது செல்வந் துன்பமின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ்சே கரிக்கோட்டு முத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென்கிலை யெங்ஙனே முத்தி கிட்டுவதே.

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயன் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மானந்த சாகரத்தே.

— அருணகிரிநாதர்.

## கந்தரனுபூதி

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்.

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

வானோ புனல்பார் கனன்மா ருதமோ
ஞானோ தயமோ நவினுன் மறையோ
யானோ மனமோ வெனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே.

திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள் ளிபதம் பணியுந்
தணியா வதிமோ கதயா பரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதா ணினைவாய்
கடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

— அருணகிரிநாதர்.

## திருப்புகழ்

**தான தந்தன தானன தானன தனதான**

**நாத** விந்துக லாதீந மோநம
வேத மந்த்ரசொ ரூபாந மோநம
ஞான பண்டித சாமீந மோநம — வெகுகோடி
நாம சம்புகு மாராந மோநம
போக அந்தரி பாலாந மோநம
நாக பந்தம யூராந மோநம — பரசூரர்
சேத தண்டவி நோதாந மோநம
கீத கிண்கிணி பாதாந மோநம
தீர சம்ப்ரம வீராந மோநம — கிரிராச
தீப மங்கள சோதீந மோநம
தூய அம்பல லீலாந மோநம
தேவ குஞ்சரி பாகாந மோநம — அருள்தாராய்
ஈத லும்பல கோலால பூசையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு — மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதேம னோகர
ராச கெம்பிர நாடாளு நாயக — வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடெமுன் னாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி — லையிலேகி
ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்நன் னாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் — பெருமாளே.

— அருணகிரிநாதர்.

## திருப்புராணம்

**வே**தநா யகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி மறுசம யங்கண் மாழப்
பேதகஞ் செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றி யான்செய்
பாதக மனைத்துந் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தோத்திரப் பாடல்கள் :**

உ

# மருதடி விநாயகர் பதிகம்

## காப்பு

### மருதடி விநாயகர்

திருவளருங் கல்விவருந் தீவினைக ளோடுங்
குருவருளும் வீடுங்கை கூடும் — பெருவளஞ்சேர்
மானி மருதடியில் வந்தருளு மைந்துகரத்
தானைமுகத் தானைநினைந் தால்.

## நாமகள்

வந்தவினை விக்கினங்கள் மாற்றும் மருதடிவாழ்
தந்திமுகத் தெந்தை தமிழ்பாடச் — சந்ததமும்
தஞ்சமஞ்சொல் வஞ்சிமஞ்சு தண்சிலம்பு கொஞ்சுவிஞ்சு
பஞ்சுமஞ்சு பாதபங்க யம்.

## குரு

சிந்திக்கும் மெய்யடியார் செய்கருமங் கைகூட்டும்
தந்திக் கடவுள் தமிழ்வருமே — முந்தி
எனைநினைந்திப் புவிபுகுந்தற் புதுமிகுஞ்சொற் றருமவன்பொற்
கனககஞ்சக் கழனினைந்தக் கால்.

## நூல்

சீர்கொண்ட மணிமிடறு மெரிகொண்ட செங்கையுந்
    திங்கள்கொண் டிடுசென்னியுந்
தீயவினை திறைகொண்ட நுதல்கொண்ட விழியுமுள
    சிவபிரான் களிறுகவும்
பார்கொண்ட பலகோடி மன்னுயிரை யீன்றன்பு
    பாலிக்கு மிமைய சிமையப்
பச்சைப் பசுங்கொடியொர் பிடியாக வுங்கருணை
    பயில்கின்ற காலத்திலே
ஏர்கொண்ட விருசெவியு முக்கண்ணு நால்வாயு
    மெழில்கொண்ட வைந்துகரமும்
ஏழுலக முங்கொண்ட தொந்திவயி றுங்கொண்
    டெழுந்தருளு மெம்பிரானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்கொண்ட வெந்துயர்க் கட்டறுத் திருபாத
  கமலங்கள் தந்தாளுவாய்
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
  கற்பகப் பிள்ளையாரே.

செம்பொன்செய் மாணிக்க மகுடமணி சென்னியுஞ்
  சிந்தூர திலத நுதலும்
செய்யபொன் னரிமாலை வெண்டரள மணிமாலை
  சீர்கொள்முந் நூன்மார்பமுங்
கொம்பொன்று கிம்புரிப் பூணுமிரு செவிமேவு
  குழைகளுங் கருணைவிழியும்
கூர்கொண்ட வங்குசம் பாசமொடு மோதகங்
  கோடுகொண் டிடுகைகளும்
கும்பங்கொள் மணிவயிறு மாரகே யூரமுங்
  கோசிகப் பட்டினுடையுங்
குடிலைதரு விந்துநா தச்செஞ் சிலம்பொலிசெய்
  குரைகழலு மாகவருவாய்
கம்பங்கொள் குஞ்சரப் பிரணவப் பொருளான
  கணபதி யெனுங்கடவுளே
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
  கற்பகப் பிள்ளையாரே.

வேதத் திலும்வேத முதலிலும் முடிவிலும்
  மேவுமோங் காரத்திலும்
விரிவுபெறு மொருகோடி மந்திரங் களினுமவை
  விளைகின்ற குடிலைவிந்து
நாதத் திலும்நாத முடிவிலும் பரையாதி
  நவபேத மாய்நடிக்கும்
நங்கைதிரு மடியிலும் விண்ணவர்கள் முடியிலும்
  நம்பிரான் பொற்றோளிலும்
போதத்தி லும்பொலியு மெம்பிரா னடியவர்கள்
  புல்லினுஞ் சாணத்திலும்
போற்றிசெய வெளிவரும் நீங்காத கருணையின்
  புதுமையை யுரைக்க வசமோ
காதத்திலும் நாறுமும்மதக் குஞ்சரக்
  கடவுளே வந்தாளுவாய்
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
  கற்பகப் பிள்ளையாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனம் புனுகுசவ் வாதிவை கலந்தநீர்
தாபித்த கலசநன்னீர்
தாழையிள நீர்தயிர்நெய் பால்கருப் பஞ்சாறு
சர்க்கரை பழஞ்செழுந்தேன்
மந்திர முறைத்தாட்டி நுண்டுகிலி னுலொற்றி
மாசில்வெண் பட்டுடுத்தி
மாணிக்க மகுடமும் மரகதச் சுட்டியும்
மணியார கேயூரமும்
சிந்துரத் திலதமும் பொன்னினுப வீதமும்
செஞ்சிலம் புந்தண்டையும்
செங்கைமணி யாழியுங் கண்டிகை பதக்கமுஞ்
சேர்த்துமலர் மாலைசூட்டிக்
கந்தமலி தூபதீ பங்காட்டி வழிபடக்
கண்ணருள் செயுங்கடவுளே
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே.

முப்பழ வருக்கமிடி யிக்குமுறி யெட்கசி
முறுக்குவடை யப்பமிளநீர்
மொச்சைகட லைப்பொரியல் சர்க்கரைய வற்பயறு
முக்குறுணி மோதகமுடன்
அப்பழ மினிக்குநற விட்டலிகி ழக்குமுறி
அற்புதமி குத்தவமுதும்
அற்பொடுநி ரைத்தடியர் கர்ப்புர விளக்குமிட
அக்கணமு ளத்துமகிழா
தொப்பையுத ரத்தையுல கத்தொடுகு லுக்கியடி
தொத்திமி திமித்திமியெனச்
சுற்றியருள் நிர்த்தமிடு மத்தபர முத்தசிவ
சுத்தசுக முத்திமுதல்வா
கற்பனை கடத்துபவ ருட்பொலிப தத்துரிய
கர்த்தவர நித்த மருள்வாய்
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே.

சந்தனப் பொதியத் தமிழ்க்குறு முனிக்கடவுள்
தண்புனல் கவிழ்த்ததேபோல்
சாமியென் சஞ்சிதக் கரகமுறை யிருவினைச்
சஞ்சலப் புனல்கவிழ்த்தே
இந்திரன் நந்தன வனந்தந்த கந்தமல
ரினமலர வைத்ததேபோல்
என்னிதய நந்தன வனத்தன்பு நன்மல
ரினங்களரு ளோடுவிரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தநன் மலர்கொய்து னடிகளர்ச் சனைபுரியு
மரியவர மென்று தருவாய்
ஆகுவா கனபூத கணநாத சதுர்வேத
வாகமப் போத பாதா
கந்தமலி கொன்றையறு கம்புலியி ளங்குழவி
கங்கையணி யெங்கள் முதல்வா
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே.

வந்தவினை யோடிடும் விக்கினம் வீடிடும்
வருகின்ற வினைகள் விலகும்
மாருத நோய்கெடும் பொல்லாத வறுமையும்
வஞ்சனைகளும் போய்விடும்
வெந்துய ரகன்றிடும் தீயநாள் கோளறும்
வெம்பகை யழிந்துபோகும்
மேலான செல்வமும் கல்வியும் ஞானமும்
வீடுமெளிதிற் கைகூடும்
புந்திமகிழ் மணமுண்டு குணமுண்டு கணமுண்டு
புகழுமுண்டு புதல்வருண்டாம்
பூலோக முடிமன்னர் வாழ்வுண்டு மும்மதப்
போதகக் களிறேயுனைக்
கந்தமலர் சிந்தி வழிபடு மடியவர்க் கென்பர்
கணபதி யெமக்கு மருள்வாய்
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே.

பொல்லாத பாவங்கள் தீரவேண்டும் நல்ல
புண்ணியம் சேரவேண்டும்
புல்லியோர் நட்பறப் போகவேண்டும் கற்ற
புனித ருறவாக வேண்டும்
சொல்லேறு நின்புகழ் நிறுக்கவேண்டும் கெட்ட
சொற்களை வெறுக்கவேண்டும்
தூயநின் னருள்வெள்ளம் நிறையவேண்டுங் கொடிய
துன்பங்கள் மறையவேண்டும்
இல்லாத வர்க்குநிதி யீயவேண்டும் பிறரை
இரவுசெயல் மாயவேண்டும்
எவ்வுயிர்க் கும்கருணை சொரியவேண்டும் பேத
மின்றியருள் விரிய வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாத நாயினேம் வேண்டும் வரந்தந்து
காப்பதுன் கடனையனே
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே.

வெற்றிமிகு கயமுகனை வீட்டியே யயனாதி
விண்ணவர்க் கருள்கொழித்தாய்
விசய கோதண்ட ராகவனைத் தொடர்ந்திட்ட
வீரகத் தியையழித்தாய்
செற்றமிகு திரிபுரத் தசுரரை யெரிக்கவருள்
தேரினைப் பொடிபடுத்தாய்
செந்தமிழ்க் குறியமுனி குண்டிகைப் புனிதநீர்
சிந்திடும் படிவிடுத்தாய்
நற்றமிழ் விரும்பி யவ்வைக்கருள் மடுத்தனைபின்
நம்பிக்குமருள் கொடுத்தாய்
நாயேங் களுக்குநீ கனவில் வந்தருள் செய்த
நன்றிக்கு மாறுமுண்டோ
கற்றவர் சுவைக்கின்ற மெய்ஞ்ஞான போதகக்
கனியேயுன் னடிகள் சரணம்
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே.

தேவாதி தேவனே சிவனருளும் மைந்தனே
தேவியம்பிகை பாலகா
செங்மண்மால் மருகனே யறுமுகன் தமையனே
சித்திபுத்திகள் மணாளா
மூவாத முதல்வனே பொற்சிகரி வாகனா
மூலவோங்கார வடிவே
மோதகக் கையனே முச்சுடர்க் கண்ணனே
முதுபூத கணநாதனே
பாவாண ருக்கருள்செய் கலைஞான பண்டிதா
பாரோங்கு குடவயிறனே
பரம காரண ஞான விகடநட வானந்த
பஞ்சாக்கரக் கடவுளே
காவா திருந்திடக் கடனில்லை வெளிவந்து
கழறந்து காத்தருள்வாய்
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாராத சித்திபுத்திக ளருளும் வள்ளலே
வற்றாத சுகவாரியே
வாடாத மெய்ஞ்ஞான கஞ்சமே மோனசுவை
மாறாத தெளிதேறலே
தீராத நோய்களைத் தீர்க்கின்ற வமுதசஞ்
சீவியே மிடிகெடுக்கும்
தேயாத செல்வமே ஓடாத செம்பொனே
தெள்ளமுதமே கட்டியே
பாரா தரித்திடும் முன்னவா பின்னவா
பாவை வல்லபை கொழுநனே
பாதகமு மன்பரருள் மோதகமு முடனுண்ணும்
பரமனே யுனைநம்பினேன்
காரானை மாமுகக் கடவுளே யிருவிழிக்
கருணைசெய் தெமையாளுவாய்
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே.

## தனியன்

ஐங்கார போற்றி முக்கண்ணனே போற்றிபா
சாங்குச கரத்த போற்றி
ஆகுவாகன போற்றி பேழை வயிறு போற்றி
அம்பிகை குமரா போற்றி
பொங்கரவ கங்கண புராதன போற்றிநட
பூதகண நாத போற்றி
போதனே போற்றிகுரு நாதனே போற்றிமெய்ப்
போதக் குருவேபோற்றி
சங்கரா போற்றிசிவ சம்புவே போற்றியிரு
தண்டையணி தாளபோற்றி
சர்வ விக்கின விநாயக போற்றி தடவிகட
சக்கர நடத்த போற்றி
கங்கைபா லகபோற்றி திங்கள் சூடியஞான
கணபதி போற்றி போற்றி
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே.

## வாழி

ஆனைமுகம் வாழி ஐந்து கரம்வாழி
ஞான மருளுமிரு தாள்வாழி — மானி
மருதடி யாரும்வாழி வண்டமிழ்ப் பாமாலை
கருதடி யாரும்வாழி காண்.

— நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ

# கதிர்காம வேலவர் பதிகம்

## காப்பு

### விநாயகர்

சித்திதருந் தென்கதிரைச் செவ்வேற் பெருமான்மேற்
பத்திதருஞ் சொற்பதிகம் பாடவே — புத்திதரும்
அம்மலைமா ணிக்க மருந்துணையாய் முன்னமருங்
கைம்மலைமா ணிக்கங் கழல்.

### நாமகள்

கண்டவர்க்கு ஞானநெறி காட்டுங் கதிரைமலை
கொண்டவர்க்குச் செந்தமிழ்ப்பாக் கூறவே—வண்டுமுரல்
முண்டகத்தாள் வேதன் முகத்தா ளெனதகத்தாள்
முண்டகத்தாள் வைப்பாள் முடி.

### குரு

பத்தித் தருவிற் பழுத்ததே மாங்கனியைத்
தித்தித் தமுதூறுந் தீங்கரும்பை — முத்திதருஞ்
சுப்ரமண்ய ஞானச் சுடர்மணியைப் போற்றியக்கா
லெப்பொருளுங் கைவந் திடும்.

## நூல்

ஏர்பூத்த மெய்யன்ப ருள்ளச்சி லம்பிலெழும்
இரவிநிக ராறுமுகமும்
இருவினைக் காடெரித் தருளமுத மழைபொழியும்
ஈராறு கமலவிழியுங்
கார்பூத்த பாசவிருள் கடியுமிள முறுவலுங்
கனககுண் டலநிரைகளுங்
கதிர்வெயி லெறிக்குநவ ரத்நமணி மகுடமுங்
கலனிலகு மகலமார்புந்
தார்பூத்த பன்னிருபு யாசலமு மிடர்நீக்கு
சத்திவடி வேலுமனைமார்
சாருமிரு பாகமும் பாததா மரையுமாய்ச்
சண்டப்பிர சண்டமயின்மேற்
சீர்பூத்த கருணையுரு வங்காட்டி விழிமாசு
தீர்த்தெனக் கருள்செய்குவாய்
தென்கதிரை மலைவேல வன்பர்மகி ழனுகூல
செந்தியம ருமைபாலனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்நெஞ் சகமெனும் பூம்புனற் குட்டத்தி
லலருமறு முககமலமே
அம்மலர்க் கண்மலர்ந் திடையரு தொழுகுபே
ரானந்த மதுரநறவே
மன்பெரும் பிறவிப்பி ணிக்கெவரு மள்ளியுண
வற்ருத ஞானவமுதே
வாரணப் பிடிதழுவு பன்னிருகை மாணிக்க
மலையேயம் மலையில்வாழும்
இன்புருவ மானவள் ளிப்பசுங் கொடிபடரு
மிருசரண கற்பதருவே
என்னிருகண் மணியே மணிக்குளொளி யேயென்ற
னிடர்கெடுத் தருளீகுவாய்
தென்பரங் குன்றில்வரு தெய்வமே பழனியிற்
செல்வமே யுனைநம்பினேன்
தென்கதிரை மலைவேல வன்பர்மகி ழனுகூல
செந்தியம ருமைபாலனே.

மன்னுயிரி னீவைத்த வெல்லைக்க டங்காத
வான்கருணை யாறுபெருகி
மாணிக்க கங்கையாய் வினைமர முரித்துவெம்
மாயைமுத லறவரித்து
முன்னுயிர்க ளிருண்மலங் கழுவிக் கழிக்குழியை
மூடிக்க ளைப்பகற்றி
முத்திக்க ரைக்கணே விடுமென்ப ரந்நதியின்
மூழ்கியிரு விழிசிறக்க
என்னுயிர்க் குயிரேதெ விட்டாத வின்பமே
யின்பத்தி லெய்துசுகமே
என்றென்று பாடியுன் னருள்வடிவு கண்டுள
மினிக்கின்ற நாளெந்தநாள்
சின்மயசொ ரூபனே குன்றுதோ றுடல்புரி
தெய்வமே யுனைநம்பினேன்
தென்கதிரை மலைவேல வன்பர்மகி ழனுகூல
செந்தியம ருமைபாலனே.

காயத் தழுக்கினுட னுயிரழுக் குங்கழுவு
கதிர்மணிக் கங்கையாடிக்
கவசவெண் ணீறுகண் மணியணிந் தமரருங்
கருதுமுன் னறெழுத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயத் தொடுநினைந் துள்ளநெக் குருகவிழி
நீரரும் பப்புளகமாய்
நின்றுமத மூன்றெழுத மைந்துகர மாணிக்க
நீலமலை தாள்வணங்கித்
தாயிற் சிறந்தபே ரன்புடைய வெந்தையுன்
சந்நிதித லைக்கூடியென்
சஞ்சலம் நீங்கவுன் சரணதா மரைகண்டு
தரிசிக்க வென்றுதருவாய்
தீயர்க்கு மழியாத கருணைமொழி நற்காம
தேனுவேயுனை நம்பினேன்
**தென்கதிரை** மலைவேல வன்பர்மகி ழனுகூல
செந்தியம ருமைபாலனே.

**திங்களணி** செஞ்சடைச் சங்கரன் முழுமுதற்
றெய்வமென் பாரவர்வலச்
செவிநிறைய மறைமுதற் பொருளுரைத் தருள்ஞான
தேசிகன் நீயாதலால்
வெங்கலி யுகத்திலே கண்கண்ட தெய்வநீ
வேண்டியுன் றிருமுன்வரும்
**விழியிலார் விழிபெறுவர்** மிடியுளார் நிதிபெறுவர்
வீணர்மெய்ஞ் ஞானியாவார்
தங்குமெய்ப் பிணியாளர் சுகமடைவர் மலடிமார்
தனயர்களை யீன்றெடுப்பார்
சாவுற்ற பேர்பிழைப் பாரிவைகள் கண்கண்ட
சான்றுமல மூன்றுநீக்கிச்
செங்கணரி மருகதிரு முருகவிழி குளிரவுன்
**திருவுருக் காட்டியருள்வாய்**
**தென்கதிரை** மலைவேல வன்பர்மகி ழனுகூல
செந்தியம ருமைபாலனே.

**மல்லாடி** யெதிர்நின்று கொடுமொழி வழங்கியரு
மாயங்கள் பலவியற்றி
வல்லடி வழக்கிட்ட சூரனுக் கின்பசுக
வாழ்வுதரு கருணைகண்டு
பொல்லாத பாவியுங் கூசாது முன்வந்து
போகாத வினைபோகவும்
புந்தியிரு ணீங்கிமெய்ஞ் ஞானவொளி யோங்கவும்
புதியசுக நிலைதேங்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமு னடிமையே யெல்லாமு னுடைமையே
யெல்லாமு னுடையசெயலே
என்றெண்ணி யிறுமாந்து சும்மா விருக்கவு
மிரங்கென்று வேண்டிநின்றேன்
செல்லாத செல்வமருள் நல்லாய் கடக்கரிய
திருவுளத் தெண்ணமறியேன்
**தென்கதிரை** மலைவேல வன்பர்மகி ழனுகூல
செந்தியம ருமைபாலனே.

**ஆராத** காதலடி யவர்தலையி லேந்திவரு
மணிகொள்கர்ப் பூரதீபம்
ஆனெய் விளக்கச் செழுஞ்சோதி யுங்கலந்
தருளுருக் கொண்டதென்ன
ஓராயி ரங்கோடி செஞ்சுடரி னொளிவிரித்
துலகிருளை வாளகிரிமேல்
ஓட்டியஞ் ஞானவிரு ளுயிர்தொறு மொழித்ததை
யுணர்ந்துபற் றித்தன்னுருப்
பாராத பேர்கதிரை பணியாத பேர்கங்கை
படியாத பேர்கணெஞ்சிற்
பரவவைத் தன்பரிரு **கண்ணிறைய** முன்னின்று
பாலிக்கு மென்பரதனைத்
தீராத வினைதீர வேழையுங் **கண்கண்டு**
**தெரிசிக்க வரமருளுவாய்**
**தென்கதிரை** மலைவேல வன்பர்மகி ழனுகூல
செந்தியம ருமைபாலனே.

**பேறுதரு** மந்திரம் பிணிகளழி மந்திரம்
பேரின்ப மருண்மந்திரம்
பெருமைதரு மந்திரம் புதுமைமிகு மந்திரம்
பேசுமர கரமந்திரம்
கூறுபவர் வாயினின் றேழுமுகி லுந்தலை
குனிந்திட முழங்கியெட்டுக்
குஞ்சரமு மலையுமலை யக்கொடுங் கூற்றமுங்
குலையவிரு வினைவரையருள்
ஏறுபட் டக்கணம் நீறுபட வேயிடித்
திருண்மலக் கோடைதணிய
இன்பமழை யன்பர்செவிச் சொரியுமென் பாரதனை
யேழையுங் கேட்கவருள்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேறுமறை முனிவரக மூறுமுத வாரியே
தேடரிய வருண்மாரியே
**தென்கதிரை** மலைவேல வன்பர்மகி ழனுகூல
செந்தியம ருமைபாலனே.

வீரவேல் தேவர்சிறை மீட்டவேல் சோதிவேல்
விண்ணகங் குடியேற்றுவேல்
வெற்பக மிடித்தவேல் மைக்கடல் குடித்தவேல்
வீரர்சிறை விடுவித்தவேல்
கோரவேல் சூரனைக் கொன்றவேல் கடலிடைக்
கொக்குத்த றித்தகூர்வேல்
கொற்றவே லருணகிரி சொற்றவேல் கீரனுரை
கொண்டவேல் விண்டுபுகழ்வேல்
ஆரவேல் சஞ்சல மழித்தவேல் மிடிபிணி
யறுத்தவே லடியர்துதிவேல்
ஆறுமுக வேல்கதிரை யமருமருள் வேலென்ப
ரதுபணித் தடிமைவினைகள்
சேரவே வாட்டியிரு **விழிகுளிர வையவுன்**
**தெரிசனந் தந்தாளுவாய்**
**தென்கதிரை** மலைவேல வன்பர்மகி ழனுகூல
செந்தியம ருமைபாலனே.

**பாவலன்** செந்தமிழ்ப் பாடலுக் கேவல்புரி
பரமசிவ னருளுமுருகா
பரவுமுத் தமிழ்வல்ல பாவாண னொடுசென்ற
பங்கயக் கண்ணன்மருகா
**தாவிலன்** புறுமௌவை கைலைபுக வருள்செய்த
தந்திக்கு கந்ததிருவே
சந்தனப் பொதியத் தமிழ்க்குறுமு னிக்குண்மை
சாற்றியருள் ஞானகுருவே
மாவலங் கொண்டநவ வீரர்க்கு முன்வந்த
வள்ளலே யுள்ளமெலிவும்
**வான்விழிக் குற்றபிணி யுந்தவிர்த் தெனையாள**
மயிலேறி வந்தருளுவாய்
சேவலங் கொடியனே **வடகாசி நிகரெனத்**
**தேவர்கள் பராவுமீழத்**
**தென்கதிரை மலை**வேல வன்பர்மகி ழனுகூல
செந்தியம ருமைபாலனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ்க் கும்பமுனி நக்கீர ஞதியோர்
முட்டின் றுரைத்தமதுர
மொழியமுத மின்றுநின் றின்பம் பயக்குமுன்
முந்நான்கு செவியகத்தே
பித்தனே னின்னற் பெருக்கிஞ லாற்ருது
பேசுபுன் மொழிகடம்மைப்
பிள்ளைப் பசுங்குதலை மொழியென்ன வேகொண்டு
பேரருள் வழங்கியெங்கள்
அத்தனே முத்துலிங் கேசர்மகி ழையனே
யானையு மானுமேவும்
ஆதியே மெய்ஞ்ஞான சோதியே யுன்னடி
யடைக்கல மடைக்கலமினிச்
சித்திநலி வும்விழிக் கூச்சமுந் தீர்த்துனது
தெரிசனமு மருள்புரிகுவாய்
தென்கதிரை மலைவேல வன்பர்மகி ழனுகூல
செந்தியம ருமைபாலனே.

கலித்துறை

விண்ணும் புவியும் புகழுங் கதிரை வியன்சிலம்பும்
எண்ணு மனமுங் குடிகொண்ட வேலனை யேத்துநர்க்கு
நண்ணும் பெருந்திரு வும்பர மாயுளு நன்மைகளுங்
கண்ணுங் குளிர்ந்தொளி காலும் வினைகள் கழன் றிடுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிரைமலைத் திருப்புகழ்

அரியு முலகினை யருளு மொருவனும்
அமரர் தலைவனும் — மழியாத
அமரர் முனிவரு மடல்கொ ளவுணனின்
அதிக கொடுமைகள் — பலகூறிப்
பிரிய முடனெமை யருள வருகுதி
பிழைகள் பலபல — பொறுநீயெம்
பெரிய குருபர முருக சரவண
பெருமவெனவெகு — துதியோத
உரிய துணைவர்கள் புடையில் வரவருள்
ஒழுகு முளமொடு — சமர்மேவி
ஒளிகொள் வடிநெடு மயிலை யசுரன
துடல நடுவற — விடுவோனே
கரிய விருண்மல வலிமை நடுவறக்
கமல மலரடி — முடிசூடக்
கலப மரகத மயிலில் வருகுதி
கதிரை மலையமர் — பெருமாளே.

*　　*　　*

குமர குருபர குமர குருபர
குமர குருபர — எனவோதிக்
குலவு மிருகழல் பரவு மடியவர்
கொடிய வினைபிணி — கடிதேக
அமல பரசுக நிறைவி லுணர்வுடன்
அமிழ வருள்புரி — முருகேசா
அமரர் மகிழ்வுற அசுரர் குலமுத
லவனை யுடலிரு — பிளவாகத்
தமர சலதியி னடுவி லழிவுசெய்
சயில வகடுடை — வடிவேலா
தனத தனவென நடன மிகவிடு
தகவு மயின்மிசை — வருவோனே
நமது வினைகெட விறவி பிறவியு
நலிய வலிமல — விருண்மாய
நயன வருள்தர வருக கதிரையில்
நலமு திரவமர் — பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிரைமலைக் கர்ப்பூரவொளி

அதிரவரு மாணிக்க கங்கைதனின் மூழ்கி
அன்பொடு சிவாயவென வருணீறு பூசி
முதிருமன் பானெஞ்ச முருகவிழி யருவி
முத்துதிர மெய்ப்புகள மூரவுரை குளறப்
புதியசெந் தமிழ்மாலை புகழ்மாலை சூடிப்
பொருவில்கந் தாசுகந் தாவென்று பாடிக்
**கதிரைமலை காணாத கண்ணென்ன கண்ணே**
**கர்ப்பூர வொளிகாணக் கண்ணென்ன கண்ணே.**

விதிவரைந் திடுபழைய வினையோடி மாயு
மிடிகொடும் பிணிசோக விதமான தேயு
மதியொடடங் காரகன் முதலான கோளு
மருவிடும் பகையோடு மாறான நாளும்
அதிசுகந் தருஞான வழியான கூடும்
அளவிலன் பூறுமல மணுகாம லோடுங்
**கதிரையென் றேதுமலை கண்டகண் கண்ணே**
**கர்ப்பூர மெய்ச்சோதி கண்டகண் கண்ணே.**

திருச்சிற்றம்பலம்.

— **நவாலியூர் சோமசுந்தரப் புலவர்**

—

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org